[11th February 1958

Lower Bhavani Area.

* 38 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have received the report of the Collector, Coimbatore, regarding the classification of lands and the rate of tax that should be levied thereon in the Lower Bhavani Area?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. Orders have since been issued for the reclassification of the lands into wet, garden and dry for the purpose of levying water cess.

SRI N. K. PALANISAMI : ஸார், இது விஷயமாக சர்க்கார் அறிக்கை கொடுத்திருப்பதில் தோட்டக்காலில் நெல் வைத்துக்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய திட்டப்படி தோட்டக் கால்களில் நெல் வைக்கலாம் என்று இருக்கிறது. இந்தப் புதுத் திட்டத்தை சர்க்கார் நீக்குவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது இதையெல்லாம் உத்தியோகஸ்தர்கள் பரிசீலனை செய்து எது நஞ்சைப் பிராந்தியம், எது தோட்டக்கால், எது புஞ்சை என்று அங்கு போய் நிர்ணயிப்பார்கள். இது அமுலுக்கு வருவதற்கு ஆக்ட் ரூல்ஸ் எல்லாம் மாற்றப்படவேண்டும். மாற்றியதும்தான் இது அமுலுக்கு வரும்.

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே தோட்டக்கால்களில் ஓரளவு, ஏதாவது கால் பங்கு அல்லது அரைப்பங்கு நெல் பயிரிடுவதற்கு அனுமதிக்கப்பட்டால் புதிய அறிக்கையில் அதற்குத் தடை போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக தோட்டக்கால்களில் எப்போதும் போல் கால்பங்கு அல்லது அரைப்பங்கு நெல் போட அனுமதிப்பார்களா என்பதுதான் என் கேள்வி.

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தந்தப் பிரதேசத்தில் எது நஞ்சை, எங்கு ஸீப்பேஜ் இருக்கிறது, இதையெல்லாம் பார்த்து உத்தியோகஸ்தர்கள் பிரிப்பார்கள். எது நஞ்சை, எது புஞ்சை, எது தோட்டக்கால் என்றெல்லாம் இவர்கள் பிரிப்பார்கள்.

SRI P. G. MANICKAM : அப்படி நிலங்களை தரம் பிரிக்கும்பொழுது அதிகாரிகளோடு ஒத்துழைப்பதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி உத்தேசம் இல்லை.

Political prisoners

* 39 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have any proposal to release the political prisoners who have been sentenced to undergo imprisonment for life?

THE HON. SRI C. SUBRAMANIAM : The answer is in the negative.

SRI N. K PALANISAMI : அரசியல் கைதிகள் 30 வருஷம், 20 வருஷ தண்டனை கொடுக்கப்பட்டு இன்றைய தினம் ஜெயிலில் இருக்கிறார்கள். பல பேர்கள் கொடுமையான நோயால் கஷ்டப்படுகிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய மாறுபட்ட அரசியல் கருத்துக்களையும், அரசியல் நிலையையும் ஒட்டி, அவர்களுக்கு பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆயுள் தண்டனை அனுபவிப்பவர்கள் கொலை குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவர்கள். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் அவரைப் பற்றி தகுந்த காரணங்கள் ஏதாவது காட்டி விடுதலை செய்யவேண்டுமென்று கேட்பார்களேயானால், அதை பரிசீலனை

11th February 1958]

செய்து சில சமயங்களில் இம்மாதிரி கைதிகளாக இருந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள். ஆனால் ஏதோ அரசியல் நோக்கத்திற்காக கொலை செய்தவர்கள் என்பதற்காக அவர்களை தண்டனையைக் குறைத்துவிட்டு விடுதலை செய்வது சரி அல்ல என்பது சர்க்காரின் எண்ணம்.

Sri K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, கொலைக் குற்றம் இல்லாமல், வேறு அரசியல் காரணங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்களில் மிகப் பெரிய தலைவரான பெரியார் அவர்களை விடுதலை செய்ய ஏதேனும் திட்டம் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை அதனால் அதற்கு இப்பொழுது பதில் சொல்லவில்லை.

Sri V. K. KOTHANDARAMAN : அமைச்சர் அவர்கள் சொன்னது போல ஜன்ம தண்டனை கொடுக்கப்பட்ட சில கைதிகளை ஆந்திராவிலே சமீபத்தில் விடுதலை செய்திருக்கிறார்கள். அதே போன்று நமது சர்க்காரும் புனராலோசனை செய்து ஜன்ம தண்டனை அடைந்த கைதிகளை விடுதலை செய்வதற்கு முன் வருவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சென்னை சர்க்காரும் சில கைதிகளை விடுதலை செய்திருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு கேஸும் பரிசீலனை செய்யப்பட்டு அதன் பிரகாரம் முடிவு செய்யப்படுகிறது.

Betel vines.

* 40 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any research has been conducted to eradicate the diseases affecting betel vines; and

(*b*) if so, the results thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Earlier trials to control the wilt disease of betel vine indicated that drenching the soil frequently and periodically with Bordeaux mixture controlled the disease. But this method is not popular with the ryots as it is costly and laborious. Hence further research is being conducted under a Second Five-Year Plan Scheme to evolve a cheaper and less laborious method to control the disease. The experiments are still in progress and no definite conclusions have yet been arrived at.

Sri N. K. PALANISAMI : கிட்டதட்ட இரண்டு, மூன்று வருஷங்களாக 'ரிஸெர்ச்' நடந்துகொண்டு வருகிறது. ஆகவே, சர்க்கார் உடனடியாக ஏதாவது ஏற்கனவே 'ரிஸெர்ச்' செய்து வெற்றி அடைந்த சில முறைகளை வெற்றிலை கொடிக்கால்களில் கையாள்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : என்னென்ன முறைகள் இப்பொழுது கையாளப்படலாமோ அவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஆராய்ச்சியில் அவசரப்படுத்தியும் பயன் இல்லை.

Sri M. P. SUBRAMANIAM : சேலம், நாமக்கல் வட்டாரத்தில் ஒரு பண்ணையை ஏற்படுத்தி ஆராய்ச்சி செய்தது உண்மைதானா ? கடந்த இரண்டு ஆண்டுகளில் அதன் அனுபவம் என்ன ? அதை விவசாயிகள் விரும்பாததும், அதனால் பயன் இல்லை என்பதும் உண்மைதானா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அது உண்மை தான். அங்கே ஒரு வெற்றிலை தோட்டம் ஏற்படுத்தி பல விஷயங்களை ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறார்கள். அந்த ஆராய்ச்சி டிசம்பர் 1956-ல் தொடங்கப்பட்டது. ஆனால் தோட்டம் ஏப்ரல் 1957-ல் தான் அமைக்கப்பட்டது. அது முதல்கொண்டு பல பரிசீலனைகள் அங்கே செய்யப்பட்டு வருகிறது. இன்னும் முடிவுகள் சொல்லக்கூடிய நிலை ஏற்படவில்லை.